சிவமயம்

மூளாயூர் முத்துக்களில் முதன்மையானவர்
ஓய்வு பெற்ற வைத்திய ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்

அமரர்

# உயர்திரு. சுப்பிரமணியம் நடராஜா

## அவர்கள்

இவ்வுலக வாழ்வுநீத்து
இறையடி எய்தியமை குறித்து வெளியிடப்பெற்ற
நெஞ்சத்து நீங்கா நினைவுகளைச் சுமந்துவரும்

# நினைவு மலர்

## "துணை மருத்துவ ஜோதி"

மூளாயூர்
முத்துக்களில் முதன்மையானவர்

ஓய்வுபெற்ற வைத்திய ஆய்வுகூடத்
தொழில்நுட்பவியலாளர்
அமரர்

# உயர்திரு. சுப்பிரமணியம் நடராசா
# அவர்கள்

இவ்வுலக வாழ்வுநீத்து
இறையடி எய்தியமை குறித்து வெளியிடப்பெற்ற
நெஞ்சத்து நீங்கா நினைவுகளைச் சுமந்துவரும்

# நினைவுமலர்

# "துணை மருத்துவ ஜோதி"



எல்லோற்கும் ராசாவாய் நடராசர் வந்துதித்து
இல்லாற்கு ஈந்துபல வல்லாராய் வாழ்ந்திட்டு
நல்லார் இவரென்று நானிலத்தார் நின்றுரைக்க
மெல்லத்தன் மேனிநீத்தார் மலராக்கி

நினைவுகூாவோம்.

உ

சிவமயம்

அமரர்

**உயர்திரு. சுப்பிரமணியம் நடராசா**

அவர்கள் பற்றி
எண்ணத்தில் தோன்றுமெம் நினைவுகளைத்
தொகுத்தெடுத்து
மறைந்தும் மறையாத அவரின்
பாதார விந்தங்களுக்கு இச்சிறுமலர்



# சமர்ப்பணமாக



மானிடனாய் பிறந்து மனிதனாய் வாழ்ந்து
தேனிலும் இனிதாகத் தித்திக்க நின்று
ஊனினை உருக்கிப் பிறர் உயிர்காக்க உழைத்து
வானிடையே கலந்திட்ட வள்ளலா ரெங்கள்
கோனினை ஒத்தாரெம் நடராசப் பெரியாரின்
மேனிதனைத் தாங்கிநின்ற பாதங்களுக்கே
ஞானியர்க்கும் உகந்ததோர் நல்மலராம் நாமெடுத்து
பூனிடுவோம் சமர்ப்பணமாய் பூதலத்தில் நன்றே!

**குடும்பத்தவர்கள்**

உ
சிவமயம்



அமரர்

# சுப்பிரமணியம் நடராஜா

தோற்றம்
12.01.1828

மறைவு
05.03.2008

## திதி வெண்பா

நடராசா என்றதோர் நல்லிதயம் மண் தோன்றி
திடமான கடமையெலாம் தினந்தோறும் ஆற்றிவிட்டு
உடமைகளாம் மனையோடு மக்களையும் விட்டிறைவன்
இடந்தேடி அடைந்த திதி மாசி அபர தியோதசியாம் துதி!

உ

*வாழ்கின்ற முறைப்படி வாழ்ந்து தனக்கும், தன்னவர்க்கும், பிறர்க்குமாகி தன்வாழ்க்கையை முடித்துக்கொண்ட*

அமரர்

உயர்திரு. சுப்பிரமணியம் நடராசா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**எல்லோரிடத்திலும்**
**காலத்தால் அழியாததோர் கல்வெட்டாகும்**

*தோன்றிற் புகழோடு தோன்றுக என்பதற்கு அமையத் தோன்றி, தோன்றியபின் பிள்ளைகளைப் புகழோடு தோன்ற வைத்து தான்மட்டும் வாழாது பிறரையும் வாழவைத்து ஓய்வெடுக்க வேண்டிய இறுதிக் காலத்தில்கூட ஓய்வென்பதறியாது நோய் நொடி உள்ளவர்களின் தேவைக்காக சேவை செய்து இல்வாழ்க்கை என்றால் எப்படி அமைய வேண்டும் என்பதற்கோர் உதாரணமாக விளங்கி இறைபக்தியோடு பல இறைபணிகளும் செய்து மற்றவர்களோடு பண்பாகவும், பாசத்தோடும் பழகி நோய்வாய்பட்டு பல காலம் படுக்கையிலே இருந்து துன்புறாது நொடிப்பொழுதினிலே இறைவன் வாவென்று அழைத்தபோது எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து இறையடி சேர்ந்துவிட்ட மதிப்புக்கும் பெருமைக்குமுரிய பெருந்தகை அமரர் சுப்பிரமணியம் நடராசா அவர்களின் வாழ்வியல் வையத்தில் வாழ்வோர் அனைவரது மனங்களிலேயும் ஓர் காலத்தால் அழியாத கல்வெட்டாகும்.*

**ஓம்**
**சாந்தி! சாந்தி! சாந்தி!**

உ

இடருற்றோர் பணியே இறைபணியாம்
என்பதற்கமைய
வைத்தியத்துறையிலே பெரும்பணியாற்றி மறைந்த
அமரர்
உயர்திரு. சுப்பிரமணியம் நடராசா
அவர்களின்
*ஆத்ம சாந்திக்காக*
*பஞ்சபுராணம் ஓதுவோமாக!*



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே!

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தனை நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடலோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே!

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே !

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிந்தனவே !

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இதமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்பெருமானே!

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகி
சோதியாய் நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி!

திருச்சிற்றம்பலம்

*இறைவன் எம்மைப் படைத்ததன் நோக்கம் தன்னைப் பாடுவதற்கும் புகழ்வதற்கும் மட்டுமன்று, தான் படைத்த மற்றவற்றிற்கும் அனுசரனையாக இருப்பதற்கேயாம். தன்னை மட்டும் பாடிப் புகழ்ந்து விட்டு தான் படைத்த மற்றவற்றை இழிவுபடுத்துவதை இறைவன் விரும்பவில்லை அது தன்னை இழிவுபடுத்துவதாகவே இறைவன் எண்ணுகின்றான். எனவே எமைப்படைத்த இறைவனை நாம் பாடிப்புகழா விட்டாலும் அவன் படைத்த மற்றவற்றிற்கு நாம் அனுசரணையாக இருப்பதை இறைவன் விரும்புகின்றான். அது நாம் தன்னைப் பாடிப்புகழ்வதாகவே இறைவன் எண்ணுகின்றான். எனவே இறைவன் படைத்த எல்லாவற்றினும் நாம் அன்புடையோர்களாய் இருந்து இறைவனை மகிழ்விப்போமாக !*

உ

அமரர்
உயர்திரு சுப்பிரமணியம் நடராசா அவர்களின்

## வாழ்க்கைப்பயணம்

முத்தான தமிழ் மணக்கும் மூளாயாம் பதியினிலே முறையோடு வாழ்ந்த குடும்பங்களில் முதன்மையான குடும்பம் அமரர் சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதியர்களின் குடும்பமாகும். கல்விவளம், கலைவளம், கமபுல வளமென பல்வளமும் செழித்திருக்க அமரர் சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதியர்களின் இல்வாழ்க்கை சிறந்து விளங்கும்வேளையிலே இவர்களுக்கு செல்வத்துள் பெருஞ்செல்வமான பிள்ளைச் செல்வங்களாக நால்வர் பிறந்தனர். அவர்கள் முறையே சிவகுரு, தங்கம்மா, செல்லம்மா, நடராசா எனப் பெயர் பெற்று விளங்கினர். பண்பும், அன்பும், பாசமும் நிறைந்த இப்பிள்ளைகளிலே நாம் இங்கே வாழ்க்கை வரலாற்றை நோக்கும் **அமரர் நடராசா** அவர்கள் சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதியருக்கு செல்ல மகனாகவும், கடைசி மகனாகவும் 12.01.1928ல் பிறந்தார்.

தோன்றிற் புகழோடு தோன்றுக என்பதற்கமைய **அமரர் நடராசா** அவர்கள் இப்புவியிலே தோன்றினார். நல்ல அழகும், அறிவும் திடகாத்திரமும் நிரம்பியவராக குழந்தைப் பருவத்திலேயே **நடராசா** அவர்கள் விளங்கினார். செல்ல மகனாகவும், கடைசி மகனாகவும் இருந்தமையால் பெற்றோர் இவர் மீது மிகுந்த பாசமும் பிரியமும் உடையவர்களாக இருந்தனர். சகோதரர்கள் அவர் மீது அன்பும் அக்கறையும் காட்டினர். மொத்தத்தில்

**அமரர் நடராசா** அவர்கள் பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் மத்தியில் ஓர் பொற்குடம்போல் விளங்கினார். பள்ளிப் பருவத்தை அடைந்த **அமரர் நடராசா** அவர்களை பெற்றோர்கள் கல்வி கற்பதற்காக கிராமத்து பாடசாலையில் சேர்த்தார்கள். சின்ன வயதிலேயே கல்வியிலே வல்லவராகவும், கலைகளிலே வல்லவராகவும் விளையாட்டு வீரனாகவும் மிளிர்ந்த **அமரர் நடராசா** அவர்கள் சிறந்த முறையிலே தனது ஆரம்பக் கல்வியை பெற்றுக் கொண்டார். அத்தோடு தனது கல்வியை நிறுத்திவிடாமல் ஆங்கிலப் பாடசாலையிலே ஓர் முதன்மை மாணவனாகவும், ஆசிரியர்களின் விருப்பத்துக்குரியதோர் மாணவனாகவும் விளங்கினார். அக்காலத்திலேயே விஞ்ஞானப் பிரிவிலே உயர் வகுப்புச் சித்தியடைந்த மாணவர்களில் **அமரர் நடராசா** அவர்களும் ஒருவராவார். மேலும் படித்தால் **நடராசா** ஒரு டாக்டராக வருவார் என்று ஆசிரியர்கள் வற்புறுத்தியபோதிலும் குடும்பசூழ்நிலைகளை கருத்தில் கொண்டு **நடராசா** அவர்கள் உத்தியோகம் பார்க்க வேண்டுமென அவாவுற்றார்.

உத்தியோகம் பார்க்க வேண்டுமென அவாவுற்ற **அமரர் நடராசா** அவர்கள் வைத்தியத்துறையிலே ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளருக்கான பரீட்சை எடுத்து மிகச் சிறந்த முறையிலே சித்தி எய்தினார். நேர்முகப்பரீட்சைக்கு சென்றார். அவருக்கு உத்தியோகம் கிடைத்தது. உத்தியோகத்தலிருந்து கொண்ட **அமரர் நடராசா** அவர்கள் குடும்பத்தில் கடைசி மகனாகப் பிறந்தாலும் குடும்பப்பாரத்தை தானே தாங்கி நின்றார்.

உத்தியோகம் மட்டும் இவருக்கு உரித்தானதன்று. விவசாயம் செய்வதிலேயும் விவசாய தேவைகளுக்கு மற்றவர்களுக்கு உதவுவதிலும் மிகச் சிறந்து விளங்கினார்.

உத்தியோகத்தின் நிமிர்த்தம் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று பணியாற்றிய **அமரர் நடராசா** அவர்கள் திருமணப் பருவத்தை அடைந்திருந்தமையால் அவருக்கு திருமணம் செய்து வைக்க விரும்பிய பெற்றோர்கள் **அமரர் நடராசா** அவர்களின் விருப்பப்படியே அவருடைய உறவுமுறையான நாகலிங்கம் விசாலாட்சி தம்பதியர்களின் அன்பு மகள் தனலட்சுமி அவர்களை திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் 24.10.1949 மிகச் சிறப்பாக நடைபெற்றது. நடராசா தனலட்சுமி தம்பதியர்கள் ஒருயிரும் ஈருடலுமாக இணைந்து கொண்டனர். மனைத்தக்க மாண்புடையாளாகி தற்கொண்டான் வளத்தக்காள வாழ்க்கைத் துணை என்பதற்கமைய அவர்களுடைய வாழ்க்கை இவ்வுலகில் மலர்வதாயிற்று. ஓர்சிறந்த இல்வாழ்க்கைக்கு உதாரணமாக இவர்களுடைய வாழ்க்கைத்தேர் நகர்ந்தது. இணைபிரியாத சோடியாக அவர்கள் உத்தியோகத்தின் நிமித்தம் **அமரர் நடராசா** அவர்கள் வேலை செய்த இடங்களான திருகோணமலை, தறவைநில, வவுனியா, குருநாகல், முல்லைத்தீவு, அநுராதபுரம், யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் என நாடு பூராவும் வலம் வந்தனர். அக்காலத்திலே இவர்களின் சிறந்த இல்வாழ்க்கையின் இனிய பலாபலன்களாக புதல்வர்கள் மூவரைப் பெற்றெடுத்து பெருமையோடும் அருமையோடும் பேணி வளர்த்தார்கள். அவர்கள் முறையே ரவீந்திரன், ரவிச்சந்திரன், ரவிகாந்தன் எனப் பெயர் பெற்று விளங்குகிறார்கள். பிள்ளைகளை உரிய முறையிலே

வளர்த்து படிக்க வைத்து பேணிக் காத்து நின்ற **அமரர் நடராசா** அவர்கள். ஒரு தந்தை தன் மக்களுக்கு செய்கின்ற அவையத்து முந்தியிருக்கச் செய்தல் என்னும் கடமையை சரிவரச் செய்து வைத்தார். உத்தியோகம் இல்வாழ்க்கை பிள்ளைகளின் நல்வாழ்க்கை என்பவற்றோடு பின்னிப் பிணைந்து நின்ற **அமரர் நடராசா** அவர்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை எண்ணி அவர்களையும் இல்வாழ்க்கைப் பந்தத்தில் ஈடுபடுத்த விரும்பினார்.

அமரர் அவர்கள் தனது மூத்த மகன் **ரவீந்திரன்** அவர்களை கல்வி கேள்வியிலே வல்லவராக்கி ஆசிரியர் தொழிலில் ஈடுபடுத்தி அவருக்கு ஏற்ற இல்வாழ்க்கைத் துணையாக விஜயலட்சுமி அவர்களைத் திருமணம் செய்து வைத்து மருமகளாக்கி கொண்டதோடு அவர்களின் இல்வாழ்க்கையின் பயனாக மஞ்சுபாஷினி, ரவிவர்மா ஆகியோரையும் பேரக்குழந்தைகளாக்கிபின்னர் அவர்களைக் கனடா நாட்டில் வாழவைத்து மகிழ்ச்சி கொண்டார். அதேபோலவே தனது இரண்டாவதுமகன் **ரவிச்சந்திரன்** அவர்களையும் நிறைந்த கல்வி பெறச் செய்து காலநிலை திணைக்களத்தில் கடமையாற்ற அவருக்கு இனியதோர் வாழ்க்கைத்துணையாக சந்திரலீலா அவர்களைத் திருமணம் செய்து வைத்து அன்புக்குரிய மருமகளாக்கிக் கொண்டதோடு அவர்களின் இல்வாழ்க்கையில் விளைந்த முத்துக்களான கஜன், மயூரன், நிசாந்தினி ஆகியோரையும் பேரப்பிள்ளைகளாகப் பெற்றதோடு அவர்களையும் பின்னர் கனடா நாட்டில் வாழவைத்து மகிழ்ச்சி கொண்டார். மேலும் தனது செல்ல மகனும் கடைசி மகனுமான ரவிகாந்தன் அவர்களையும் எல்லா வழிகளிலும் உயர்ச்சி பெறச் செய்து நல்ல கல்வியும் கலைகளும் புகட்டி

வல்லவராக்கியதோடு அவரையும் இனிய இல்வாழ்க்கையில் இணைப்பதற்காக சதாரூபவதி அவர்களைத் திருமணம் செய்து வைத்து அன்பிற்கும் பாசத்திற்குமுரிய மருமகளாக்கிக் கொண்டதோடு அவர்கள் மூலம் லக்ஸ்மன், புருஷோத்தமன் ஆகியோரையும் பேரக் குழந்தைகளாகப் பெற்று அவர்களையும் பிரான்ஸ் நாட்டில் வாழவைத்து மகிழ்ச்சி கொண்டிருந்தார்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லாரும் பிறநாட்டிலேயே வாழ்ந்ததால் **அமரர் நடராசா** அவர்கள் தன்னுடைய பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். ஏறக்குறைய 46 வருடங்கள் வைத்தியத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெற்றுக்கொண்ட **அமரர் நடராசா** அவர்கள் ஒருபோதும் ஓய்ந்திருக்கவில்லை. பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவன்றி மக்கள் சேவை செய்ய வேண்டுமென்பதற்காக பல தனியார் மருத்துவமனைகளிலும் ஆய்வுகூடத் தொழில்நுட்ப-வியலாளராகக் கடமையாற்றினார். இறுதிவரையும் அச்சேவையில் உறுதியோடு உழைத்த **அமரர் நடராசா** அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள எயிட்ஸ் கிளினிக் என்று சொல்லப்படுகின்ற ஸ்தாபனத்திலே நீண்ட நாட்களாக மக்கள் சேவை புரிந்தார். **அமரர் நடராசா** அவர்கள் அத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல் பல பொதுப்-பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஐக்கிய நாணய சங்க உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் சிறப்பாக செயலாற்றியதுடன் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை உறுப்பினராகவும் நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து அரும்பெரும் சேவையாற்றினார்.

தன்னுடைய பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளும் பிறநாட்டிலே வாழ்ந்ததால் தன்னுடைய உறவுப்பிள்ளைகளை தன் பிள்ளைகள்போல் வளர்த்து ஆளாக்கி கல்வியிலே வல்லவர்களாக்கி அவர்கள் உத்தியோகம் பெறுவதற்கும், திருமணம் செய்வதற்கும் உறுதுணையாக நின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக தன்னுடைய மனைவியை நேசித்த அமரர் நடராசா அவர்கள் அவரை செல்ல வேண்டிய இடங்களுக்கு கூட்டிச் செல்வதிலும் அவருடைய பணிவிடைகள் பலவற்றையும் மகிழ்ச்சியோடு செய்வதிலும் காலத்தைக் கடத்தினார். உறவுப் பிள்ளைகளைப் பராமரித்தல், மனைவியைப் பராமரித்தல், பிறநாட்டிலுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் நலம் விசாரித்தல், உத்தியோகத்திற்கு செல்லல், பொதுசேவைகள் செய்தல் போன்ற ஓயாத கடமைகளை இறுதிவரையிலே ஓயாது செய்து வந்த அமரர் நடராசா அவர்கள் வயதின் முதிர்ச்சியால் சிறிது உடல்நலம் தளர்ந்திருந்தார். அந்த நேரத்தில் கூட உற்சாகம் தளராதவராகக் காட்சி தந்த அமரர் நடராசா அவர்கள்தன்னுடைய 60ம் ஆண்டு திருமணவிழாவினை சிறப்புற நடாத்தவேண்டுமென ஆயத்தம் செய்தார். பலரிடமும் அதைக் கூறியிருந்தார். அப்போது இரண்டு மூன்று நாட்களாக உடற்சுகவீனமுற்று அதற்கான வைத்தியமும் செய்தார். இன்னும் இரண்டு நாட்களில் தேறிவிடுவேன் எல்லாக் கடமைகளையும் செய்வேன் என்று எல்லோரிடமும் சொன்னார். ஆனாலும் நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்று சொல்வார்கள். கிராமத்தின் மத்தியிலே பூரண கும்பம் போல இருந்து கொண்டு பல கடமைகளையும் ஆற்றி

வந்த அந்த அன்புத் தெய்வத்தைக் கவர்வதற்கு காலன் விரும்பினான் போலும் அன்று 05.03.2008 நண்பகல் 12.00 மணிக்கு மாசி அபரபக்க திரயோதசி திதியில் நடராசா என்கின்ற அப்பெருவிருட்சத்தை காலன் அடியோடு சாய்த்திட்டு அவரின் ஆத்மாவை கண்ணன் திருவடியில் சேர்த்தான்.!

ஓம்

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

80 வருடங்கள் வாழ்வதும் 60 வருடங்கள் இல்வாழ்க்கை வாழ்வதும் 40 வருடங்கள் சிறந்த சேவை செய்வதுவும் ஒரு சாதாரண விடயமல்ல. அமரர் சுப்பிரமணியம் நடராசா அவர்கள் அப்பேறு பெற்றாரென்றால் அதற்கு காரணம் அவரின் திறந்த மனதும் அன்பான இதயமுமேயாகும். அதுபோலவே திறந்த மனத்தோடும் அன்பான இதயத்தோடும் வாழ்வோமானால் அமரர் நடராசா அவர்கள் பெற்ற பேறு நாமும் பெறலாம்.

உ

காலமெலாம் கலங்கவிடேன் என்றுரைத்தீர் ஐயாவே
இன்றதனை மறந்தோ எனைவிட்டுச் சென்றீர் !

# அன்பு மனைவி

காதலித்தீர் கைப்பிடித்தீர் கணவனென நின்றீர்
ஆதலினால் கலங்கவிடேன் என்றுறுதி தந்தீர்
ஏதலியாய் இன்று எனை ஏங்கித் தவிக்கவிட்டு
பூதலத்தை விட்டுமெல்லப் போனதென்ன ஐயாவே!.

அறுபது ஆண்டுகளாய் உமை விட்டுப் பிரிவறியேன்
இறுதிவரை உம்மோடு இருப்பதென உறுதி செய்தேன்
பொறுத்துநான் போனபின்பு போவதற்கு மனமின்றி
வெறுத்துலகை விட்டு மெல்லப் போனதென்ன ஐயாவே !.

எத்தனை இடங்களிலே கடமைகளை நீர் செய்தீர்
அத்தனை இடங்களிலும் அருந்துணையாய் எனைக் காத்தீர்
இத்தரையில் எனக்கு இனி யார் துணையை வைத்திட்டு
முத்துடலை விட்டு மெல்லப் போனதென்ன ஐயாவே !.

காலையிலே எழுந்து மெல்லக் கடமையெலாம் முடித்திட்டு
வேலையென்று போவதற்கு முன்னரொரு வேலையாக
மாலைவரை வேண்டியதை மறக்காமல் தந்து செல்வீர்
சோலை விட்டு மெல்ல மெல்லப் போனதென்ன ஐயாவே !.

ஐம்புலனும் நீராகி இப்புவியில் எனைக் காத்தீர்
நம்பியே உம்மைநான் நாளெலாம் இயங்கி வந்தேன்
எம்பிரானே நடராசா என்றுலகோர் நயப்பவரே
உம்பாட்டில் விட்டு மெல்லப் போனதென்ன ஐயாவே !.

அன்புக்கணவரின் ஆத்மா
சாந்தி பெறுவதாக.

உ

## சொந்த இடம் விட்டகன்றீர்
## இனி எந்த இடம் காண்போம்

## <u>பாசத்தின் புதல்வர்கள்</u>

தந்தையொடு தாய்போலும் பெற்றெம்மை வளர்த்தெடுத்து
சிந்தை தெளிந்திடவே சிறந்தபல அறிவூட்டி
எந்தையென நாம்போற்ற மகிழ்ந்திருந்த அப்பாவே
உந்தனை நாம் காண்பதினி எந்த இடம் சொல்வீரோ !

நாடு முற்றிலுமே நல்ல தொழில் ஆற்றுகையில்
கூடுகட்டி ஆங்காங்கே குஞ்சுகளாய் எமைக்காத்து
பாடுபட்டுக் கல்வியொடு கனிவு தந்த அப்பாவே
வீடு வந்தால் காண்பதினி எந்த இடம் சொல்வீரோ !

மூன்று முத்துக்கள் என் சொத்துக்கள் என்று சொல்லி
சான்றுகளாய் தோள்மீதும் மடிமீதும் எமைச்சுமந்து
வான்உயர் வகையெல்லாம் செய்துவைத்த அப்பாவே
தேன்முகம்தான் காண்பதினி எந்த இடம் சொல்வீரோ !

அன்னைக்கு நீங்களென்றும் உங்களுக்குஅன்னையென்றும்
என்றுமோர் உறுதுணையை உறுதியோடு வைத்திருந்தீர்
இன்றன்னை தனித்திடவோ உறுதிவிட்டீர் அப்பாவே
நின்முகம்தான் காண்பதினி எந்த இடம் சொல்வீரோ !

கடல்கடந்து நாமிங்கே உடலோடு வாழந்தாலும்
இடரின்றி உயிரைநாம் உம்மிடமே வைத்திருந்தோம்
நடராசர் என்றுலகோர் நன்றுரைக்கும் அப்பாவே
தொடர்ந்தும்மைக் காண்பதினி எந்த இடம் சொல்வீரோ !

பாசமிகு தந்தையின்
ஆத்மா சாந்தி பெறுவதாக.

உ

## மருமகளின் உள்ளக்குமுறல்

என் மதிப்பிற்கும் பாசத்திற்கும் உரிய மாமா. மலர்ந்த செந்தாமரை போன்ற உங்கள் வதனம் எங்கே? உங்கள் புன்சிரிப்பு எங்கே மறைந்தது. எங்களையெல்லாம் விட்டு ஏன் சென்றீர்கள். தாங்கமுடியவில்லை மாமா. எங்களை விட்டு செல்ல எப்படி மனம் வந்தது. நீங்கள் வந்து எங்களை பார்க்கும்வரை நாங்கள் நாலுபேரும் இருப்போம். நீங்கள் கவலைப்படாமல் ஆறுதலாக வாருங்கள் என்று சொல்லி விட்டு நீங்கள் அவசரப்பட்டு எங்களை ஏமாற்றி சென்றுவிட்டீர்களே.

மாமியை ஒரு குழந்தையை பார்ப்பது போல் மிகவும் அன்பாகவும் கவனமாகவும் பார்த்தீர்கள். இப்போ அவவையும் நட்டாற்றில் விட்டமாதிரி விட்டுவிட்டு போய்விட்டீர்கள். எங்களாலேயே உங்கள் இழப்பை தாங்க முடியவில்லை. அவர் எப்படி தாங்குவார்.

இரண்டு கிழமைக்கு ஒருமுறை உங்களுடன் கதைப்பேன். அப்போ எவ்வளவு புத்திமதிகள் ஆறுதல் வார்த்தைகள் எல்லாம் சொல்வீர்கள். மாமாவைப்போல் இல்லாமல் பெற்ற தந்தையைப்போல் எங்களுடன் பழகி ஆறுதல் கூறுவீர்கள். எவ்வளவு மனச்சுமைகள் இருந்தாலும் உங்களுடன் கதைத்தவுடன் அது நீரில்

குமிழிபோல் மறைந்துவிடும். இனி நான் யாருடன் மாமா, மாமா என கதைப்பேன். தாங்கமுடியவில்லை. உள்ளம் வெடிக்கின்றது மாமா.

5ம்திகதி புதன்கிழமை வழமைபோல் விடிந்தது. ஆனால் அன்று என்னால் நித்திரை விட்டு எழும்ப முடியவில்லை. ஏதோ மனம் சரியில்லை என்னவென்று தெரியவில்லை. ஆனால் மாமா நீங்கள் எங்களை விட்டுப் போகப்போகிறீர்கள் என்பதற்குத் தான் அந்தக் காரணம் என்பது அப்போ எனக்குத் தெரியவில்லை சதாவுக்கு நான் சொன்ன சொல்லை காப்பாற்றாமல் போகிறேன் என்று நீங்கள் நினைத்தது தான் அதுவாக இருக்கும்.

2007ம் ஆண்டு உங்களை எல்லாம் இந்தியாவில் பார்த்து எல்லோருக்கும் சந்தோசமாக இருந்தது. அதுதான் நாங்கள் உங்களைப் பார்க்கும் கடைசி நாட்கள் என்று நாம் எண்ணவில்லை. திரும்பவும் உங்களை இலங்கையில் வந்து பார்ப்போம் என்றிருந்தோம். ஆனால் காலம் செய்த கொடுமையால் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டது. ஆனால் ஒரு மனநிறைவு மாமா எல்லாப் பேரப்பிள்ளைகளையும் பார்த்துவிட்டீர்கள். ஆனால் காந்தன் சதா பிள்ளைகளைப் பார்க்கவில்லை என்ற குறை இல்லாமல் இந்தியாவிற்கு வந்து பிள்ளைகளைக் காட்டிவிட்டேன் அதுபோதும் எனக்கு.

எல்லாரிற்கும் உதவி செய்யும் உங்களை காலன் ஏன் கொண்டு சென்றான். உங்களிற்காக அழாத ஆட்களே இல்லை. மாமா உங்களை குறை கூறும் ஒருவரையும் நான் பார்க்கவில்லை. எல்லாரிற்கும் அறிவுரை கூறியும் உதவி செய்யும் உங்களை ஆண்டவன் தன்னிடம் அழைக்க நினைத்தான் போலும். அதுதான் சொர்க்க வாசல் திறந்திருக்கும் சிவராத்திரி காலத்தில் உங்களை தன்னிடம் அழைத்திருக்கிறான். நீங்கள் செய்த புண்ணியத்தால் கஸ்ரப்படாமல் நீங்கள் இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள். ஆனால் நாம் தான் இங்கு உங்களின் நினைவால் வாடுகிறோம் மாமா. ஆறுதல் கூற நீங்கள் இல்லை.

பூமியில் பிறப்பவர்கள் எல்லாம் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். ஆனால் அந்த இழப்பை எங்களால் தாங்க முடியவில்லை. என் செய்வது தாங்கித்தான் ஆக வேண்டும். தெய்வமாகிய நீங்கள் தெய்வமாக நின்று எங்களை ஆசீர்வதித்து நல்வழி காட்டவேண்டும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்.

ஓம்
சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி !

உங்கள் பாசத்திற்குரிய
மருமகள் சதா.

உ

**எதனையும் நாம் பொறுத்திடுவோம்**
**இதனையும் பொறுப்போமோ**

## <u>பேரப்பிள்ளைகள்.</u>

தாத்தாவின் மடிவாழத் தவம் செய்ய வேண்டும் நாம்
கூத்தாடிக் கூத்தாடி குறுங்கதைகள் பல சொல்லி
தோத்திரமும் பாடித் துதித்தெம்மைக் காத்திட்டு
பூத்தமலர் உதிர்வதுபோல் உதிர்ந்தீட்டீர் பொறுப்போமோ !

அப்பா உம்கதை சொல்ல ஆவலோடு கேட்டிடுவோம்
எப்போது உம்மையே எண்ணிநாம் வாழந்து வந்தோம்
சுப்பிரமணியம் நடராசா என்றுலகோர் போற்றுகின்ற
ஒப்பரிய தாத்தாவே உம்பிரிவைப் பொறுப்போமோ !

நீங்கள் எந்தையரைத் தாங்கிநின்ற தன்மையைப்போல்
பாங்குடனே எங்களையும் தந்தையர்கள் தாங்குதற்கு
ஓங்கிடுமோர் வழிகாட்டி உயர்வுதந்த தாத்தாவே
ஏங்கிநாம் தவித்திடவே எமைநீத்தீர் பொறுப்போமோ !

பட்டுச் சிறகடித்துப் பாரெல்லாம் கடந்து வந்து
பொட்டிட்ட உம் முகத்தைப் பார்ப்பதற்கு நாட்குறித்தோம்
கட்டுக்குள் அடங்காத கருணை உள்ளத் தாத்தாவே
இட்டனரோ இடுகாட்டில் இழப்பினை நாம் பொறுப்போமோ!

இதயத்தின் கதவுகட்குள் பாட்டியை நீர் பூட்டி வைத்தீர்
உதயத்தில் இருந்தே அவர் ஊன்றுகோலாய் நின்றீர்
கதவினையும் உடைத்தெறிந்து கைப்பிடியும் விடடுவிட்டீர்
எதனையும் பொறுத்திடலாம் தாத்தா இதையும் நாம்
பொறுப்போமோ !

**அன்புடைய தாத்தாவின்**
**ஆத்மா சாந்தி பெறுவதாக.**

உ

**கூடிப் பிறந்தவரை குவலயத்தே தவிக்கவிட்டு**

**ஓடிப் போனதென்ன ஓர் நொடியில்**

**மறைந்ததென்ன**

## சகோதரர்கள்

கூடிப் பிறந்தவனே குவலயத்தை ஆண்டவனே
ஆடிப்பாடியெமை அருகிருந்து காத்தவனே
வாடிக்கிடந்த பலர் வாழ்வினுக்கு வளங்கொடுக்க
தேடிப்பல செலவம் தினம் தினம் தந்தவனே
நாடியே வந்தெனக்கு நல்லதுணை நீயீந்து
நீடித்த காலம் நிகரின்றி உழைத்திட்டு
சோடிப் புறாவினையும் சோகத்தில் தவிக்கவிட்டே
ஓடித்தான் போனதென்ன ஓர் நொடியில்
மறைந்ததென்ன

அன்புடைய சகோரரின்
ஆத்மா சாந்தி பெறுவதாக.

- முயற்சி பயிற்சி இவையே உன் வாழ்க்கையின் உயர்ச்சி அதுவே நாளைய புகழ்ச்சி.
- தப்புக் கணக்குகளை நீ அதிகம் போடாதே. ஏனெனில் உன் வாழ்வே தப்பாகி போய்விடும்.

உ

பொய்யிந்த வாழ் க்கையென்று பின்னுரை
வைத்திட்டோ மெய்ஞான நிலை பெற்று
மேதினியை விட்டகன்றீர் !

## மைத்துனர்கள்

மைத்துனம் என்பதற்கு பொருளும்மில் நாமறிந்தோம்
வையத்தில் உம்போல உதவுவோரை நாமறியோம்
தெய்வத்தின் திருமகனே சுப்பிரமணியம் நடராசாவே
சைவத்தின் நெறிநின்ற சந்திரனின் முகத்தோனே
தைமாத மேகமென தரையெல்லாம் நடந்தெமக்கு
கைகொடுத்து கலங்காமல் காலமெலாம் காத்திட்டு
பொய்யிந்த வாழ்க்கையென்று பின்னுரை வைத்திட்டோ
மெய்ஞான நிலைபெற்றீர் மேதினியை
விட்டகன்றே !.

அன்புடைய மைத்துனன்
ஆத்மா சாந்தி பெறுவதாக.

உ

## குலவிளக்கே நீர் அணைந்தது ஏனோ

## உற்றார் உறவினர் ஊர் மக்கள் பெறாமக்கள் மருமக்கள்

கலங்கரை விளக்காக கண்ணுக்குள் நின்றீர்
வலக்கரமாகி யெம் வாழ்வினைச் சுமந்தீர்
நலம்பல தந்தெம்மை வலம் வந்து நின்றீர்
துலங்கிட உம்பணி துயரின்றி வாழ்ந்தீர்
தலமெலாம் சென்றிறை பணிகளும் செய்தே
புலமையோடவன் புகழ்பாடித்துதித்திட்டு
பலம் மிகு ஆத்மா பரமனை அடைந்திட
குலவிளக்கே நீர் அணைந்தது ஏனோ !

- ❖ பல தீபங்களை உன்னால் தான் ஒளிருமாகவிருந்தால் நீ தீக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.
- ❖ மரணத்தை கண்டு பயப்படுவதைபோல பாவங்களை கண்டும் விலகிக்கொள்.

மூளாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் நடராசா அவர்கள் வைத்தியசாலையில் ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னர் யாழ்ப்பாணம் “எயிற் லைன்ஸ்” இலும் இறக்கும் வரை தனது கடமையைத் தொடர்ந்தார். அமரர் நடராஜா அவர்கள் தனலட்சுமியை மணம்புரிந்து தற்போது கனடாவில் வாழும் ரவீந்திரன், ரவிச்சந்திரன் மற்றும் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் ரவிகாந்தன் ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர் தனது தொழிலில் கடமையே கண்ணாக இருந்ததுபோல ஏனையோரும் அர்ப்பணிப்புடனும் தத்தமது கடமைகளில் ஈடுபட வேண்டும் என்பதை எடுத்தியம்பத் தவறியவில்லை. மேலும் இவர் சமய நடவடிக்கைகளிலும் அயராது அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன் எமது கிராமத்திலுள்ள ஆலய வளர்ச்சியிலும் அர்த்தமுள்ள பங்களிப்பை செய்தமையை அனைவரும் நன்றியுடன் நினைவுகூருவது பொருத்தமாகும் எனக் கருதுகிறேன்.

அமரர் சிறந்த குடும்பத் தலைவனாகவும், உற்ற நண்பனாகவும், கிராம மக்களின் பயனுள்ள தோழனாகவும் வாழ்ந்ததுடன் தனது பிள்ளைகளையும் அதே வழியில் வாழக்கூடியவாறு உருவாக்கி இறைபதமடைந்துள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

**இ. த. விக்னராசா**

*மாவட்ட நீதிபதி*
*யாழ்ப்பாணம்.*

உ

சுப்பிரமணியம் நடராசா அவர்களின் மரணச்-செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தேன்.அமரத்துவம் அடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்கூட ஆய்வுகூடத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது உரையாடிச் சென்றேன். ஓய்வு பெற்றபின் நீர் வீட்டிலிருந்து இளைப்பாறக்கூடிய வசதிகள் இருந்தும் இறுதிமூச்சுவரை உழைத்த பெரியார் அமரர் சு. நடராசா அவர்கள்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர்களில் மிக மூத்த உறுப்பினரான அன்னார் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்ட பின்னர் துணை மருத்துவத்துறை தொழிலில் நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார்கள் சேவை மனப்பான்மையும், இறைபக்தியும், அர்ப்பணிப்பும் கொண்ட இப்பெரியார் பழகுவதற்கு இனியவராவார். தம் வாழ்க்கைத் துணைவி-யாரோடும், பிள்ளைகளோடும் அன்பாகவும், அந்நியோன்நியமாகவும் வாழ்ந்து வழிகாட்டினார்கள். தாம் எங்கு சென்றாலும் தன் வாழ்க்கைத்துணையையும் கூடவே அழைத்துச் சென்று இணைபிரியாத கணவராக வாழ்ந்து சென்றுள்ளார்கள். தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திலும் மிகக்கூடிய கவனம் செலுத்தி அவர்கள் தம் வாழ்க்கையில் புகளோடும், பெருமையோடும் வாழ்வதற்கு வித்திட்டார்கள். தந்தையாரைப் போலவே ஒழுக்கசீலர்களாகப் பிள்ளைகள் வாழ்வது, தந்தையின் வாழ்க்கை முறைமையினையும், வழிகாட்டுதலையும் பறைசாற்றி நிற்கின்றன. தனிப்பட்டமுறையில் எனக்குப் பேருதவி புரிந்த அமரர் நடராசா ஐயாவினை என்னால் என்றும் மறக்கவியலாது. இவ்வுயர்ந்த பண்பாளனை என்றும் மறக்க முடியாது.

"நற்பண்புகள் மனிதனை ஆக்குகின்றன" என்னும் கூற்றக்கிணங்க அமரர் நடராசா ஐயாவின் இழப்பு பேரிழப்பாகும். இவரை இழந்து நிற்கும் குடும்பத்தார்க்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**கா. சந்திரபாலன்**
*ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்,*
*(திட்டமிடல்)*
*வலயக் கல்விப் பணிமனை, வலிகாமம்.*

## Symbol of Dedication, Affection, Duty and Endurance

With immense grief I write this brief message to the proposed memorial book to our loving "Moolai Appa", the late Mr. S. Nadarajah. We have been especially privileged to know him since 1979, particularly, from the day my sister got married his eldest son Raveenthran. From the day onwards, our immediate family members, extended family members, and the whole village people developed a closeness and sincerity in relationship with him and started calling him "Moolai Appa", which was maintained to the last day of his passing away. During the times of crisis, especially when we lost our father (late Ayur Vedic Dr. V. Vijayaratnam) in 1985, he filled that space and gave us moral support. He also guided us through difficult times. When we displaced from our village (Valalai) in 1985 due to a sudden attack of "Liberation Operation" by the Sri Lankan armed forces, he was a pillar of strength to our family and relatives. He ensured we all were secured and settled. He provided us with shelter and guarded us in the new environment. We all depended on him for advice and support for major decisions of life events. My marriage was solemnized at his residence in Moolai in 1988 during the war period. Even though there was a tight curfew passed on and tremendous problems with transportation facilities from one place to

another, he arranged everything he could do at his best for me to make that event very special. Words cannot adequately convey the profound sadness felt by us when news reached in Canada that "Moolai Appa" has passed away suddenly to the world beyond.

He was loyal and dedicated to his relatives, friends and co-workers. His word was his honor and his promise was his bond. He was trusted, respected and liked by all of them. Another aspect of his personality was his attitude to selfless service to all. He was a humble, simple, dedicated, religious and righteous human being who served hrs community by various means and ways, and this was shown in the way he lived his life.

To his family, his relatives, his friends, his community and to humanity, he was a great man – a man of action, affection, self sacrifice and humility. He was a very loving and caring father not only for his own children but also for many other children. He was a loving son to most of the seniors living in his neighborhood. He will remain in our memories as a father, a social well wisher and a great man to remember for the rest of our lives.

Although his passing away is undoubtedly sorrowful, we have to see the bigger picture. Our ancient Hindhu scriptures (Vedas and Upanishads) say that life on earth is

not the end of the road. There are higher realms where the pure consciousness or super consciousness or God exists. The dedication, affection, friendship, duty, generosity, family values and endurance that Appa practiced during his life time on earth will undoubtedly place his soul at a higher level. His life has set an example and a model for all of us and he will be remembered dearly by every one of us.

It was with deep regret and overwhelming sadness that we had to accept the passing of Moolai Appa who has been our stronghold in Sri Lanka for the past 25 years. We will definitely miss him.

Amma! we convey our heart felt condolences to you. We all pray here in Canada that you will somehow find the strength to deal with this unfortunate tragedy.

With love and prayers,

**Ananthy and Mahendran**

**On behalf of Vijayaratnam**

**family Scarborough, Canada**

## எங்கள் அன்புச் சந்தப்பாவே

அன்பு நிறை மனத்துடனே
ஆதரவு காட்டி நிதம்
பண்புடனே எமை வளர்த்த
பாசம் மிகு சந்தப்பாவே............

கனிவுடனே கல்வி தந்து
களங்கமற்ற வாழ்வு தந்து
வளமாக நாம் வாழ
வழியமைத்த சந்தப்பாவே...........

அறிவுரைகள் பல தந்து
அன்புவழி காட்டி எம்மை
அவதனில் அகம் மகிழ
ஆக்கி வைத்த சந்தப்பாவே............

உண்மையின் உறைவிடமாய்
உழைப்பின் இலக்கணமாய்
பண்புக்கோர் சிகரமாய்
பாசத்துக்கோர் உதாரணமாய்
இல்லறத்தில் நல்ல புத்தகமாய்
இறையன்பு மிக்கவராய்
எம்மை வாழவைத்து விட்டு
எங்கே தான் சென்றீர்கள்

மருத்துவப் பணி தன்னை
மாண்புடனே ஆற்றிவிட்டு
மரணத்தை ஏற்று நீங்கள்
மறைந்தது தான் நியாயமா?

*திருமதி. ஆ. மகாலட்சுமி*
*மூளாய்.*

உ

## சகோதரனை மறவாதிருக்க

## அன்பு அக்கா

அன்புத்தம்பி நடராசா உம்முடைய திடீர் மறைவு மனதுக்கு பெருங்கவலையாய்விட்டது. 2ம் திகதி என்னுடன் கதைத்தீர். 5ம் திகதி பயணம் போய்விட்டீர், ஆறாக்கவலை விதியே விதி.

என்னுடைய ஆருயிர் அம்பலவாணர் வரதன்புலோவாவின் பக்தர் இறைபதம் எய்தியபோது அவருடைய கடமைகள் எல்லாம் அன்பாய் பக்தியாய் செய்து மற்ற அலுவல்களையும் பண்பாய் சிறப்பாய் நடத்தியதை நான் உயிர்உள்ளவரை மறக்க மாட்டேன். அதன் பிறகும் இடைக்கிடை என்வீடு வந்து என்ன யோசனை, வீணாக வருத்தத்தைத் தேட வேண்டாம். தேவையானவற்றைச் சொன்னால் நான் செய்வேன் என்று அன்பாகச் சொல்லி செய்து தந்ததையும் சீவியத்தில் மறக்கமுடியாது. வரதன் புலோவான் செயல் நீங்கள் இரண்டுபேரும் இல்லாத ஆள் இல்லாத்துக்கம் அழுதாலும் தீராது. எல்லாம் சிவன்செயல்

*அம்பலவாணர் அன்னலட்சுமி*

உ

விண்ணுலகை ஆழ்வதற்கோ அவசரமாய்க் சென்றீட்டீர் !

## அன்புடன் அக்கா செல்லம்மா

தோழ் மீது நான் சுமந்தேன் தொட்டிலாயும் தானிருந்தேன்
தாழ்வேதும் அறியாது தரணிதனில் நான் வளர்த்தேன்
ஏழ்மையிலும் கூடஉனைச் செல்வமென்றோ நான்நினைத்தேன்
கீழ்வானப் பௌர்னமியின் சந்திரனாய் எண்ணிநின்றேன்
வாழ்வுப் பயணமதில் ஊன்றுகோலாய்த் தானிருந்து
வீழ்ந்திடாமல் எனமக்காத்த வித்தகனே நடராசா
மீழ் வதற்கோர் வழியிலையோ மாழ்வதற்கோ உடன் பிறந்து
ஆழ்வதற்காய் விண்ணுலகம் அவசரமாய் சென்றீட்டாய் !

உ

பாசத்தால் மடிதந்து பக்குவமாய்க் காத்திட்டு எமன் வந்து
அழைத்திடவோ அவசரமாய்ச் சென்றிட்டீர்

## அக்காவின் பிள்ளைகள் (மருமக்கள்)

அம்மாவின் உடன் பிறந்தீர் எம்மோடு உடனிருந்தீர்
மாமா என்ற தோர் பந்தத்தின் மடிதந்தீர்
செம்மையாய் வாழ்வுதனை நாம் பெற்று வாழ்வதற்கு
வையத்தில் எங்களுக்கோர் வழித்துணையுமாயிருந்தீர்
உம்மைப் போல் ஒருறவை எண்ணி நாம் பார்த்ததில்லை
தாயாகித் தந்தையுமாய் தெய்வமென இருந்திட்டு
எம்மிதயத் தாமரையில் எழுந்தருளி நின்றவரே
எமன் வந்து அழைத்தானோ எமைவிட்டே சென்றிட்டீர் !

## MY FAVOURITE GRAND'FATHER

I was privileged enough to know my grandfather both as a child and as an adult. As a child, I knew him only as a wonderful grandfather. As an adult, I learned about both his good traits and his bad so I know that he was not a perfect man. However, I can say that despite his imperfections, my grandfather was a great man. One whom I will miss dearly, and one whom I will always remember with love.

My fondest memories of my grandfather occurred in my early childhood. I loved it when he came to visit because I knew that he would spend time playing with me and telling me stories. When I did something wrong, he never scolded or yelled but he managed to calmly explain my mistakes. When my mother wanted to discipline me, I knew that I could run to him and that he would shield me from punishment. Best of all, I knew that he loved me unconditionally and that in his eyes, I could do no wrong.

Like most children, my grandfather's accomplishments didn't mean as much to me until later in my life. As I approached adulthood myself and started to face obstacles, I realized that my grandfather achieved a lot in his life through determination and perseverance. He helped numerous people along the way and he used his humour, wit

and patience to brighten people's lives. As a child, my grandfather came from humble beginnings where education was a privilege not a right. Despite the odds, and with the help of a few, he managed to have an accomplished career as an Medical Laboratory Technician as well as get married and successfully raise three kids.

Like many in Sri Lanka, he let his children go to foreign lands so that they could pursue a better life for themselves and their families. Not wanting to burden them, he continued to work until almost his last day. It is a testament to his determination and resolve that he was able to live independently until the age of 80. I remember asking him repeatedly why he continued to work so late in life. His reply was always that his work sustained him and kept him going. I later realized that he enjoyed his work because he found great joy in helping people.

Although his passing has caused great sadness, it has also given me the chance to meet many people who he has helped over the years. It has also allowed me to get to know him better and to appreciate his great qualities even more. I am truly honoured to be his granddaughter and grateful to have had the opportunity to get know him.

**Remembering him with love and affection,**
**Manjubasini Raveenthran**

உ

**கடமைகள் முடிந்திடக் காருண்ய மைந்தன்**
**விடமுண்தான் அடிசேர்ந்தார் தேறுவீர் நன்றே !**

## தேற்றம்

நடராசர் என்ற தோர் பேர்தாங்கி வந்திங்கு
சுடர் மிகு ஒளியென சுவையோடு வாழ்ந்து
இடரெலாம் களைந்தெமை இன்புற வைத்திட்ட
படர்கொடிக் கொம்பெனும் பாசத்தின் தந்தை
தொடர்ந்திங்கு வாழாதுயிர் துறந்திட்டாரென்று
உடலுயிர் நோகநீர் உறங்கிடா தளாதீர்
கடமைகள் முடிந்திடக் காருண்ய மைந்தனார்
விடமுண்டான் அடிசேர்ந்தார் தேறுவீர்நன்றோ!

- **வளையாத பாதையில் நடைபோடு. வெற்றி உன் பாதையில் அணிவகுக்கும்.**
- **வெற்றியின் சிகரத்தை அடைந்திட வேண்டுமெனில் முயற்சிகளை அத்திவாரமிட்டுக்கொள்.**

உ

**அமரர்**

**சுப்பிரமணியம் நடராசா ஐயா அவர்களின் ஆத்மசாந்திக்காக**

## <u>மூளாயூர் வதிரன்புலோவானை வேண்டி நிற்போம்</u>

வாழ வழியொன்று வந்துவிடும் – நீங்கள்
வதிரன் புலோவானை வணங்கிநின்றால்
மூளாத பக்தியும் மூண்டுவிடும் – நீங்கள்
மூளாய் என்றருள் மூட்டிவிட்டால் !

(வாழ வழியொன்று ….)

கேளாமல் செல்வங்கள் சேர்ந்துவிடும் – நீங்கள்
நாளாக வதிரனை நம்பி நின்றால்
மாளாத கல்வியும் மலர்ந்துவிடும் – நீங்கள்
மூளாயூர் மூத்தோனை வணங்கி நின்றால் !

(வாழ வழியொன்று ….)

ஓடியே வினையாவும் ஒழிந்துவிடும் – நீங்கள்
பாடியே வதிரைனப் பணிந்துநின்றால்
தேடியே நன்மைகள் கூடிவரும் – நீங்கள்
நாடியே மூளாயூர் வணங்கிநின்றால் !

(வாழ வழியொன்று ….)

மொத்தமாய் முத்தமிழ் சேர்ந்துவிடும் – நீங்கள்
நித்தம் வதிரனை வணங்கி நின்றால்
சித்தியும் புத்தியும் சேர்ந்துவிடும் –நீங்கள்
சொத்தென மூத்தோனைத் தொழுது நின்றால் !

(வாழ வழியொன்று ….)

வெற்றியே வாழ்வெலாம் சுற்றிவரும் – நீங்கள்
பற்றோடு வதிரனைப் பற்றி நின்றால்
கற்றிடும் கலையெல்லாம் நிலைத்துவிடும் –நீங்கள்
பொற்றுணை மூளாயில் வேண்டி நின்றால்

(வாழ வழியொன்று ….)

**ஆக்கம் :**

அமரர் . சு. நடராசா அவர்களுக்காக
**ஆசுகவி மூளாய்.**

உ

# பரமனின் பேறு பெற்ற நடராசா ...!

சந்தப்பா சந்தப்பா சந்தோசம் தந்தப்பா
என்னாளும் எம்முன்னே இருந்திட்ட எம்மப்பா
பல்லோரும் போற்றுதற்குப் பரமனின் பேறு பெற்றாய்
எல்லோரையும் வாழவைத்து எங்கு நீ சென்றாய்

இல்லறத்திற்கு இலக்கணமாய் நல்லறத்தின் வலக்கரமாய்
கடமையில் கண்ணியமாய் காலத்தின் அற்புதமாய்
பொறுமையின் பொக்கிசமாய் பொறாமையின் எதிரியாய்
வாழ்ந்து காட்டிவிட்டு எங்கு நீ சென்றாயோ

வள்ளலூர் நோக்கி வந்தீர் எமக்கெல்லாம் வாழ்வு தந்தீர்
வள்ளுவன் குறளிற்கு இலக்கணம் வகுத்து நின்றீர்
அன்பினால் எதனையும் வெல்லலாம்
அனைவரையும் அன்பால் வெல்லுங்கள்
அடிக்கடி உச்சரிக்கும் போதெல்லாம்
அகத்தினில் வந்தமரும் உங்களிற்கு
எம் மாயிரம் கோடி அஞ்சலிகள் !

மருமகன்
வீரசிங்கம்

உ

## அரும்பெரும் கண்ண பக்தர்
## அமரர்
## சுப்பிரமணியம் நடராசா அவர்களை
## கண்ணன் திருவடி சேர்த்திடுவோம்.

கீதை உரை கேட்கிது – எங்கள்
பொன்னாலைக் கடல்வந்து பொங்கி எழுகையில்
கீதை உரை கேட்கிது !

காதை மனம் தீட்டுது - கண்ணன்
ராதைக்காய் பொன்னாலைத் தலமூதும் குழல்கேட்க
காதை மனம் தீட்டுது (கீதை உரை கேட்கிது ....)

காக்கும் கரம் தோன்றுது
கண்ணில் ஒளி பாயுது
நோக்கும் இடமெல்லாம் நீலநிறமாகி
கண்ணன் எழில் தோன்றுது ! (கீதை உரை கேட்கிது ....)

கடலும் அலை ஓயுது
உடலை மயி ஆக்கிது
அடலேறு பாம்பின்மேல் அவன் தூக்கவேமெல்ல
திடல்போலக் கடல் மாறுது ! (கீதை உரை கேட்கிது ....)

சங்கொன்று கரம் தோன்றுது
சக்கரம் சுழன்றாடுது
தக்கதோர் வேளையில் உனைக்காக்க நாமமும்
தோன்றவே பயமோடுது ! (கீதை உரை கேட்கிது....)

பசுவொன்று தவம் செய்தது
சிசுவின்றிப் பால்சிந்திது
குழலூதும் கண்ணனை பொன்னாலை கண்டது
எழுந்தோடிப் பால் சிந்திது ! (கீதை உரை கேட்கிது ....)

அகிலத்தில் இருளோடுது
அடியார்க்கு அருள் சேருது
நடராசர் மைத்துனன் நவனீதகிருஸ்ணனின்
பெயர் கூறத் துயரோடுது. (கீதை உரை கேட்கிது ....)

ஆக்கம்:
அமரர் சு. நடராசா அவர்களுக்காக
ஆசுகவி மூளாய்

உ

# ஆத்மீகப் பயணமும் அந்தியேட்டி ஆண்டுத் திவசமும் அறிந்து கொள்வோம்

இறைவனுடைய அனுக்கிரகத்தால் ஆத்மா என்று ஒன்று உருவாகின்றது. உலகியலை நடாத்துவதற்காக இறைவன் அத்தகையதோர் ஆத்மாவை உருவாக்குகின்றான். உருவாகின்ற ஆத்மா பல படிமுறைகளைக் கடந்து இறுதியில் இறைவனை அடையும். ஒரு ஆத்மா முதலில் புல்லாக பிறக்கின்றது. முதலில் புல்லாக பிறக்கும் ஆத்மா பின்னர் பதினான்கு படிமுறைகனைக் கடந்து இறைவனை அடையும். இவையே பதினான்கு பிறப்புக்களாகும். இப் பதினான்கு பிறப்புக்களையும் மாணிக்கவாசக சுவாமிகள் புல்லாகிப் பூடாகி எனத் தொடங்கி முனிவராய், தேவராய் என ஒழுங்குபடுத்திக் கூறியிருக்கின்றார். அப் பதினான்கு பிறப்பிலேயும் மனிதப்பிறப்பு என்பது ஒரு மையக் கல்லாகும். மனிதப்பிறப்பிலிருந்து நாம் இறைவனை அண்மிக்கின்ற மேன்நிலையும் அடையலாம். அவ்வாறு அடையாது மீண்டும் புல்லாகவும் பிறக்கலாம். அது நாம் மானிடப்பிறப்பை பயன்படுத்துகின்ற முறையினைப் பொறுத்ததாகும். இதனையே நாம் சொர்க்கமும், நரகமும் என குறிப்பிடுகின்றோம். ஒவ்வொரு பிறப்பிலேயும் புதிது புதிதாகப் புகுந்து கொள்கின்ற ஆத்மா அப்பிறப்புக்கள் இறக்கும்போது மீண்டும் ஒரு பிறப்பிலே புகுந்து கொண்டே

வரும். பிறப்புக்களின் மையக்கல்லான மானிடப் பிறப்பிலே புகுந்து விடுகின்ற ஒரு ஆத்மா அந்த மானிடம் இறக்கும்போது வேறு ஒரு பிறப்பிலே புகுந்து கொள்வதற்காக அருவ வடிவிலே இருக்கும். அந்த அருவவடிவக்காலம் 31 நாட்களாகும். என்ன திதி என்ன நட்சத்திரம் என்ன பட்சத்தில் ஒரு ஆத்மா மானிட உடலை விட்டுப் பிரிந்ததோ அதிலிருந்து சரியாக 31 நாட்கள் அந்தரத்திலே இருக்கும். அது வேறு ஒரு உடலிலே புகுந்து கொள்வதற்கு ஆத்மா தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் காலமாகும். சரியாக 31ம் நாள் அந்த ஆத்மா வேறு ஒரு உடலிலே புகுந்துவிடும். வேறு ஒரு உடலுக்குள் புகுவதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் அந்த 31 நாட்களும் அந்தரத்திலே இருப்பதால் அந்தரத்திலே இருக்கின்ற ஆத்மாவின் தவிப்பைத் தவிர்ப்பதற்காக ஆத்மாவிற்கு பால், பழம், படையல்கள், இளநீர் போன்றவற்றை வைத்து ஆறுதல் அளிக்கின்றோம. 31ம் நாள் அந்த ஆத்மாவை வழியனுப்புவதற்காக ஆத்ம வழியனுப்புக் கிரிகைகள் செய்கின்றோம். அதுவே ஆத்ம சாந்திக்கிரிகைககள் என்றும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியம் என்றும் சொல்லப்படுகின்றது. இறைவனையும் தேவர்களையும் அழைத்தே அந்த வழியனுப்பு வைபவம் நடைபெறுவதால் சிவபூசையும் தேவர்களுக்கான படையல்களும் அங்கே வைக்கப்படுகின்றது. மேற்படி வைபவத்திலே ஆத்மாவிற்கு உரியவர் ஒரு பயணத்தை மேற்கொண்டால் என்னென்ன பொருட்கள் பண்டங்களைக் கொண்டு செல்வாரோ அவற்றையெல்லாம் தேடி

ஆத்மாவை வழியனுப்பும்போதும் கொடுத்து விடுகின்றோம். ஆத்மாவை உணர்கின்ற பக்குவம் எமக்கின்மையால் அந்தணர் ஒருவரை அவ் ஆத்மாவாகப் பாவித்து அவரிடம் அவற்றையெல்லாம் கொடுத்தனுப்புகின்றோம். உடலின் பிரிவு கவலைக்கும் ஆத்மாவின் பிரிவு மகிழ்ச்சிக்-குரியதாகவும் இருப்பதால் உறவினர்கள் எல்லோரும்கூடி சமைத்து உண்டு மகிழ்கின்றோம். அந்தியேட்டி என்பது இவ்வாறு முடிந்துவிட ஆத்மாதான் இருந்த உடல் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப வேறு உடல் எடுத்து இருந்தாலும் வருடத்திற்கு ஒரு முறை முன்னைய உடலோடு இருந்த இடத்திற்குச் சஞ்சரித்து தன்னுடைய முன்னைய உறவுகளைத் தரிசிக்கும். அதுவும் என்ன திதி என்ன நட்சத்திரம் என்ன பட்சம் ஆத்மா பிரிந்ததோ அதே திதி அதே நட்சத்திரம், அதே பட்சத்தில் சரியாக ஒரு வருடம் முடியும்போது நிகழும். அதுவே ஆண்டுத்திவசம் எனப்படும். அவ்வாறு சஞ்சரிக்கும் ஆத்மாவை எங்களால் உணர முடியாது. மிருகங்கள், பறவைகள், ஞானிகள் போன்றவர்கள் உணர்வார்கள். அவ்வாறு சஞ்சரிக்கும் ஆத்மாவை ஆதரித்தால் ஆத்மா மகிழ்ந்து வாழ்த்திச் செல்லும். ஆதரிக்கவில்லையென்றால் தூற்றிவிட்டுச் செல்லும். ஆத்மாவின் வாழ்த்தலும் தூற்றலும் பலிக்கக்கூடியவை எனவே அந்தியேட்டி செய்து வழியனுப்பும் ஒரு ஆத்மாவை ஆண்டு தோறும் துதித்து வழிபட்டு உய்வோமாக! அதுவே திவசமாகும்!

## வாழ்த்து

வாழிநம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன் வாழி
நண்ணியிறை பூசைசெய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சைவ நெறிவளர்க்கும் பெரியோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி!
ஏற்புடனே கேட்டருளும் அன்பர் வாழி
வாழிரும் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சைவ நெறிவாழி வாழி! வாழி!

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

ஓம்

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

# கண்ணீர்க் காணிக்கை

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 |  | 05 |
| 01 | | 03 |
| 1928 | | 2008 |

# அமரர். சுப்பிரமணியம் நடராசா

(ஓய்வு பெற்ற மருத்துவ இரசாயன தொழில்நுட்பவியலாளர்)

தலைவர் மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்

## "நடையர் அண்ணை"

எமது சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும், உபதலைவராகவும் தற்போதைய தலைவராகவும், இச்சங்கத்தின் வளர்ச்சியில் சிறப்புற செயலாற்றி, யாழ் மாவட்டத்தில் முதல் தர ஐக்கிய நாணய சங்கமாகவும், ஏனைய கூட்டுறவு சொற்பாடுகளுக்கு முன்னுதாரணமாக விளங்க வைத்தவருமான "நடையர் அண்ணை" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவருமான அமரர். சுப்பிரமணியம் நடராசா அவர்களின் திடீர் மறைவு எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னார் இக்கிராமத்தில் ஒரு விடிவெள்ளியாக இருந்து எல்லோருக்கும் வழிகாட்டிய ஓர் நல்மனம் கொண்ட பெரியார் ஆவார்.

இப்பெரியார் இக்கிராமத்தில் இமயம் போல் விளங்கும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின் ஓர் அரிய பத்தி கொண்ட அடியவர் ஆவார். எந்நேரமும் அண்டவனின் நாமத்தை உச்சரித்தபடி இருப்பார்.

அன்னாரின் மறைவு இக்கிராமத்திற்கு ஓர் பேரிழப்பாகும். அவரை இழந்து சோகத்தில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் துயருறும்
**மூளாய் கிழக்கு**
**ஐக்கிய நாணயசங்கம்**

மூளாய்.
06-03-2008

# கண்ணீர் பூக்கள்



தோற்றம்
12-01-1928

மறைவு
05-03-2008

அமரர்

# சுப்பிரமணியம் நடராசா (MLT)

அவர்கள்

பரிந்து பார்வையில் பண்புள்ளம் கொண்டவர்
பாரினுள்ளோர்களில் நீதிலன்பானவர்
பரிந்து நிலையில் பழகிவிடும் தன்மையானவர்
சிரித்த முகத்தினன் சிறந்த நற்கொடையினர்
பட்டெனப் பாரினில் படுத்துறங்கி
சட்டெனக் கண்மூடி சடுதியில் சென்றனர்
சிட்ட நின்றோ ரெல்லாம் எண்ணி கலங்கிட
எட்டா வழியது போயினர் போயினர்
எப்போ வருவீர்கள் என ஏங்கி நிற்கும் ......

எயிட்லைன்ஸ்
ஆய்வுகூடத்தினர்

யாழ்ப்பாணம்.

அமரர் மூளாயூர் முத்துக்களில் முதன்மையானவர்
ஒய்வுபெற்ற வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
மூளாயூர் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை உறுப்பினர்

# உயர்திரு. சு. நடராசா

அவர்களின் பிரிவால் துயருறும்
மூளாய் சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையினர் சிந்தும்

# கண்ணீர்ப்பூக்கள்

தோற்றம்
12.01.1928



மறைவு
05.03.2008



மூளாயூர் முத்துக்கள் பலவற்றில் முதல்வன் நீ
ஆனால் நாள் முதலாய் அருந்தொண்டு புரிபவன் நீ
நாளாக நம்முடனின் உடல்பொருட்கள் நிலையறிந்து
தோளாகித் துயர் தீர்த்தீர் நடராசா எங்கு சென்றீர்!
வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளன் நீ
கைத்திறன் காட்டிய கடமையை செய்பவன் நீ
சகத்திரு மாதத்து தாரகைபோல் இருந்திட்டு
வைத்தியராய் காத்தோ நடராசா எங்கு சென்றீர்!
நல்லதோர் இல்லாளை தாயகியாய்க் கொண்டவன் நீ
நன்மக்கள் மருமக்கள் பேரரையும் கொண்டவன் நீ
இல்லையென்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லாதிருக்க
சொல்லாமல் கொள்ளாமல் நடராசா எங்கு சென்றீர்!
எண்பது ஆண்டுகால அகவையைக் கடந்தவன் நீ
பண்போடு அறுபதாண்டு இல்லறத்தை ஆய்ந்தவன் நீ
தண்ணொளி பரப்புகின்ற தாரகைபோல் இருந்தின்று
எண்ணரிய உடல்விட்டு நடராசா எங்கு சென்றீர்!
வதிரன்புலோவானின் வாஞ்சைமிகு பக்தன் நீ
கதிர்வேலாயுதத்தானின் கருத்திறைந்த அப்பன் நீ
உதிரம் உள்ளவரை அக்கோவில் சபையிருந்து
விதிகொடுத்தீர் நெறிகொடுத்தீர் நடராசா எங்கு சென்றீர்!
கடமையே தெய்வமென்ற கருத்தோடு நடந்தவன் நீ
உடமையாய் உறவுகளின் அன்பையே பெற்றவன் நீ
நடப்புடன் நறுமலர் எனினை வாழ்வை முடித்திட்டு
கடல் ஒன்று மறைந்ததுபோல் நடராசா எங்கு சென்றீர்!
இன்றுவரை ஒன்றையின்று அறிவிடவே விட்டவன் நீ
தன்னவர் தம்மையுமே தவித்திடவும் வைத்தவன் நீ
என்றினி வருவீரோ என்றவர்கள் தவித்திடவே
இன்று துயர் பகிர்கின்றோம் நடராசா எங்கு சென்றீர்!



ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
மூளாய்.

அன்னாரின் பிரிவால் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்கும்
பரிபாலன சபையினர்

முளாய் ஊரில் பிறந்த மூத்த பெரும் தலைவன் நடராசா மாமா என்று எல்லோராலும்
அழைக்கப்பட்ட நல்லோன் ஓய்வு பெற்ற வைத்தியஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர் (M.L.T)

**உயர்திரு.சு.நடராசா** அவர்களின் மறைவுக்காய் நாம் சிந்தும்

# கண்ணீர்பூக்கள்



தோற்றம்
1928
*
01
*
12

மறைவு
2008
*
03
*
05

உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உத்தம அழகுடையோன்
கள்ளச் சிரிப்பாலே கருமங்கள் முடித்திடுவான்
தெள்ளத் தெளிந்த நிலா முகத்தழகோன் நடராசா
மௌனத்தின் மேனிவிட்டு மோனநிலைதான் அடைந்தாரோ!

மானிடனாய்ப் பிறந்ததன் மகிமைதனை நானுணர்ந்து
ஊனிலை உருக்கித்தன் உறவுகட்காய் உழைத்து வந்து
மேனிதனைக் காக்காமல் மேதினியைக் காத்திட்ட
தேனிலும் இனியமகன் நடராசா மறைந்தாரோ!

பூரணகும்பம் போல் ஊருக்குள் அமர்ந்திருந்து
காரணத்தை உணர்ந்துபல காரியங்கள் செய்துவைத்து
பாரதத்தின் சாரமதைப் படையிலே சாற்றிநின்ற
வீரமகன் நடராசா விடைபெற்றுப் பறந்தாரோ!

உடலோடு உயிரினையும் வைத்தியப் பணிக்காக்கி
திடமான இடமொன்றை தடம் பதித்து வைத்திருந்து
கடமைக்காய் காலத்தை கண்ணியமாய் நடத்தி வந்த
நடமாடும் தெய்வமெங்கள் நடராசா மறைந்தாரோ!

நகைச்சுவை ததும்பவே நல்லபல கதைபேசி
பகைப்போரும் பணிந்திடவே பரிவுபல காட்டிநின்று
திகைத்திடவே தன்பணியை திறமையோடு ஆற்றிவந்த
மிகைப்படுத்தாத் திறலுடையோன் நடராசா மறைந்தாரோ!

உயிர்ப்பான உத்தமியை உயிர்க்குயிராய் நேசித்து
முப்பெரும் புதல்வரையும் முறையோடு வாழவைத்து
தப்பிலா வாழ்வு வாழ்ந்த தங்கநிற மனத்தழகோன்
ஒப்பரிய நடராசா ஊரைவிட்டு மறைந்தாரோ!

நடராசா என்றதொரு மாணிக்கம்தான் மறைந்ததென்று
நடந்து வந்த பாதையினை மறவாமல் பாதுகாத்து
விண்முனைதன் பாதமதில் விரும்பியவர் உறைவதற்கு
விடைகொடுப்போம் கண்ணீரால் ஓம் சாந்தி சாந்தியென்றே!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**சித்திவிநாயகர் வர்த்தக நிலையம்,**
**பிள்ளையார் கோவிலடி ,முளாய்**

**அன்னாரின் பேரிழப்பால்துயருறும்**
**க.பாலச்சந்திரன்**

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
12.01.1928

விண்ணில்
05.03.2008



அமரர் திரு.

## சுப்பிரமணியம் நடராசா - (MLT-மூளாய்)

மாமா,

அந்தரித்த வேளையிலே அண்டி நிற்போம் – உங்களையே
அத்தனையும் நிறைவு செய்து அன்புடனே – ஒப்புவிப்பீர்
என்ன தேவை என்றாலும் மாமா என்று அழைத்திடுவோம்
அன்புடனே கேட்டறிந்து ஆறுதல் தந்திடுவீர்

தனித்திருந்த எங்களுக்கு தந்தையாய் உதவி நின்றீர்
ஆறுதல்கள் பல கூறி நல்வழிகள் காட்டி நின்றீர்
நானிலத்தில் உமக்கீடாய் யார் வருவார் இந்நிலத்தில்
நானும் என் பிள்ளைகளும் உம் பிரிவால் ஏங்குகின்றோம்.

மாமாவின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
சித்திவிநாயகப் பெருமானை பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் மாமி
பிள்ளைகட்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்,

**சோதிலிங்கம் குடும்பம்**
**மூளாய் (கொழும்பு)**

தங்கள் அனைவரிற்கும்காலத்தால் அழியாத எமது



## நன்றிகள் உரித்தாகட்டும்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செந்நன்றி கொன்ற மகர்க்கு"

மனிதருள் மாணிக்கமான எமது அன்புத் தெய்வம் **அமரர் திரு. சு. நடராசா** அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் இருந்தபோது அவரோடு அன்பாகக் கூடிப்பழகியோர்க்கும், வயோதிப காலத்திலும் அவரிற்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து நடந்தோர்க்கும் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவரைப் பார்வையிட்டு ஆறுதல் கூறியோர்க்கும் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தோர்க்கும், அவரின் உடல் இறுதிச் சடங்கிற்காகக் காத்திருந்தபோது இரவு பகலாக நின்று உதவியோர்க்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு எல்லாவழிகளிலும் உதவியோர்க்கும் மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் தகனக்கிரியைகளுக்காக மயானம் வரைவந்து உதவியோர்க்கும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோர்க்கும் எமது உளம் கனிந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மூளாய் றோட*
*மூளாய், சுளிபுரம்.*
*04.04.2008.*




*இங்ஙனம்*
***குடும்பத்தவர்கள்***

**நன்றி, வணக்கம்**

கலைமகள் கொம்பியூட்டர் பிறின்ட், யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக,, திருநெல்வேலி.
தொ.பேசி.இல. 021-222-3116

# வம்சாவழி




**நடராசா**

\+

**தனலட்சுமி**

- ரவீந்திரன்
  \+
  விஜயலட்சுமி
  - மஞ்சுபாஷினி
  - ரவிவர்மா

சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் + தங்கமுத்து

சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்

\+

செல்லம்மா

- தங்கம்மா
  \+
  சின்னத்துரை
  - சிவராசா
  - சிவதேவி
  - சித்திரா
  - சிவகுமார்
  - இந்திராதேவி
- சிவகுரு
  \+
  பரமகல்யாணி
  - பாலேந்திரன்
  - குலேந்திரன்
  - செல்வேந்திரன்
  - வதனா


தங்கமுத்து

\+

வைத்திலிங்கம்

- செல்லம்மா
  \+
  கந்தையா
  - சரஸ்வதிதேவி
    \+
    சரவணமுத்து
    - சிவப்பிரியன்
  - பேரின்பநாயகி
  - மங்கையர்திலகம்

# வம்சாவழி




**நடராசா**

\+

**தனலட்சுமி**

அம்பலவாணர் நாகலிங்கம்

\+

விசாலாட்சி

**தனலட்சுமி** | **பரிபூரணம்** | **அருணாசலம்** | **சரஸ்வதி** | **சோமசுந்தரம்**

**ரவீந்திரன்** + **விஜயலட்சுமி**
- **மஞ்சுபாஷினி**
- **ரவிவர்மா**

**ரவிச்சந்திரன்** + **சந்திரலீலா**
- **கஜேந்திரா**
- **மயூரேந்திரா**
- **நிஷாந்தினி**

**ரவிகாந்தன்** + **சதாரூபாவதி**
- **லக்ஷ்மன்**
- **புருஷோத்தமன்**

மா

ா

பநாயகி மங்கையர்திலகம்

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.

